ஜாதி என்ற சொல் தமிழிலே இல்லை

திராவிடநாடு

மலர் 9 | 22—10—50 | இதழ் 18

இலங்கை 15 சதம்] [விலை அணா இரண்டு

மத நூல்களே மாசுகளின் பிறப்பிடம்

சிந்தனையே நம் செல்வம்

மதுரை மாணவரிடையே நெடுஞ்செழியன்

"சிந்தியுங்கள். சிந்திக்கத் தெரியாதவன் முட்டாள்; சிந்திக்கத் தெரிந்தும் சிந்திக்காமல் இருப்பவன் கோழை; சிந்தித்து அறிந்தும் அதை மாற்றி உரைப்பவன் வஞ்சகன். சிந்தித்து நல்லது என்று கண்டதை வெளியிட மறுப்பவன் அயோக்கியன். ஆகவே மாணவ மணிகளே! எதிர்காலச் சிற்பிகளே! சிந்தித்து, நாட்டுக்கான நற்பணியாற்றுங்கள். சிந்தனையே நம் செல்வம்" என்று 3—10—50 மாலை மதுரை அமெரிக்கன் கல்லூரி வள்ளுவர் தமிழ்க் கழக சிறப்புக் கூட்டத்தில் பேசிய தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., வீர முழக்கமிட்டார். மேற்படி சிறப்புக் கூட்டத்துக்கு கழக அமைச்சர் தோழர் நா. முத்தியாலு தலைமை தாங்கினார்.

தோழியர் இராசாம்பாள் தமிழ் வணக்கம் பாடினார்கள். பின்பு தமிழ் நாட்டின் புலவரேறு மறைத் திரு. மறைமலையடிகளார் அவர்கள் இயற்கை யெய்தியமைக்கும், தமிழன்பரும் சேலம் கல்லூரியின் முதல்வருமாகிய உயர்திரு. இராமசாமிக் கவுண்டர் அவர்கள் இயற்கை எய்தியமைக்கும் இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கழகத் துணைத் தலைவர் உயர்திரு. ப. ஜோதிமுத்து எம். ஏ., பி. டி., விருந்ினராகிய சென்னைத் தோழர் உயர்திரு. இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., வை வரவேற்று உரையாற்றினார்கள்.

தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., "இலக்கிய நோக்கம்" எனும் பொருள் பற்றி சுவையும், பொருளும், நயமும் மிக்க நீண்டதொரு சொற்பொழிவாற்றினார்கள். அவர் குறிப்பிட்டதாவது:-

"தமிழ்ப் பேறிஞர்களும், தமிழ்த் தொண்டர்களுமாகிய இவ்விரு பெரியார்களின் மறைவு குறித்து நீங்கள் இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றியது வரவேற்கத் தக்கதாகும். இது நீங்கள் தமிழுக்கு நல்ல மதிப்பைத் தருகிறீர்கள் என்பதைக் காட்டுகின்றது.

இலக்கியங்கள் கலையென்றும், விஞ்ஞானமென்றும் இருவகைப்படும். விஞ்ஞானம் உள்ளதை உள்ளவாறே கூறுவதொன்றாகும். கலையென்பது இயற்கை நிகழ்ச்சிகளை உணர்ந்து தாங்கள் உணர்ந்தவாறு பிறரும் உணரும்படி செய்வதாகும். உதாரணமாகக் கதிரவன் தன்னைத்தானேச் சுற்றிக்கொள்கிறான். பூமி கதிரவனைச்சுற்றி வருகிறது. பூகோளப்பாட அறிஞர்கள் இவ்வாறு எடுத்தியம்புகின்றார்கள். ஆனால் கதிரவனுடைய தோற்றத்தையும், மறைவையும் கண்ட கவிஞன் ஞாயிறு கடலினின்று எழுகிறானென்றும் கூறுகின்றான். இவ்வாறு அவன் நிகழ்ச்சிகளை, மனத்திலே கிளர்ச்சிகள் ஏற்படுமாறு எடுத்துக்கூறுவது கலையாகும். ஆனால் உண்மையில் கதிரவன் எழுவதுமில்லை, உட்காருவதுமில்லை ஓவியன் மலையைக்காண்கிறான்; அருவியைப் பார்க்கிறான்; கடலில்சென்று ஆறு கலப்பதைக்காண்கிறான். அதை ஓவியத்தில் தீட்டுகிறான். இங்கே நாம் அருவியின் ஒலியைக்கேட்கமுடியாது. அதுவழியும்முறையை அறிய இயலாது. பசும்புல் தரையில்பாய்ந்தோடும் நிலையைத் தெரிந்து கொள்ளமுடியாது. ஆனால் காவியத்தில் மலையின் வளம், அருவின் தன்மை, அது வழியும்முறை, அது பைம்பொழிலில் செல்லும் காட்சி இவற்றைக்காணலாம். இது காவியம்.

இலக்கியங்கள் இன்பச் சுவைக்காகவே பயன்படவேண்டுமென்று ஒரு சிலர் விரும்புகின்றார்கள். அத்தகைய கருத்து உகந்ததல்ல. இலக்கியங்கள் மக்களுடைய வாழ்க்கைப் பண்புகளையும், நிகழ்ச்சிகளையும், விளக்குவதோடு அவைகளை ஒட்டியதாகவே இருக்கவேண்டும். பண்டைய இலக்கியங்கள் அதாவது சங்க இலக்கியங்களான அகநானூறு, புறநானூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, தொல்காப்பியம் போன்றவைகள் மக்களுடைய வாழ்க்கை வழிகளை ஒட்டியிருந்தன. பண்டைத் தமிழ் மக்களுடைய போர்க் கருவிகள் வாள், வேல், வில், அக்கினியாஸ்திரம், வாயுவாஸ்திரம், வருணாஸ்திரம் கிடையாது. ஆகையால்தான் அவர்கள் வடக்கேயிருந்து வந்த படையெடுப்புக்களனைத்தையும் விரட்டியடித்திருக்கின்றார்கள். அசோகனின் சாம்ராஜ்யமும், சந்திரகுப்தனின் சாம்ராஜ்யமும், கனிஷ்கனின் சாம்ராஜ்யமும், அக்பரின் சாம்ராஜ்யமும், அவுரங்கசீபின் சாம்ராஜ்யமும் தென்னாட்டை அடிமை கொண்டதாகச் சரித்திரமில்லை. ஆனால், மத்திய காலத்திலே எழுந்த நூல்கள் தமிழர்களுடைய மனதிலே மாசுகளைப் படியச் செய்தன. அதன் விளைவாக உயர்ந்த நிலையில் வாழ்ந்த மக்கள் வீழ்ந்தார்கள். பண்டைப் பெருமை குலைந்தது. மனிதன் உண்மை நிலையினின்றும் இழிந்து கற்பனையுலகிற்குச் சென்றுவிட்டான். அதன் விளைவுதான் இத்தகைய தாழ்நிலை. சங்க காலத்தில் தலைவனும், தலைவியும் பொழிலகத்தே சந்தித்து காதல் கொண்டு பின் மணம் புரிந்தனர். பின் சிலப்பதிகாரத்தில் மாமுதுபார்ப்பான் மறை வழி காட்டிட தீவழி வலம் வந்து மணம் புரியும் பழக்கம் ஏற்பட்டது. சங்க காலத்தில் புரோகிதர் இல்லை; அம்மி மிதிப்பதில்லை, அருந்ததி பார்ப்பதில்லை, ஆல், அரசுக்குச்சிகளைப் போட்டு பொசுக்குவது கிடையாது. சாதி என்றசொல்லே தமிழில் கிடையாது. தொல்காப்பியம் மிகப்பழைய இலக்கணம். அதற்கு முன்பே இலக்கியங்கள் மிகுதியும் தோன்றியிருக்கவேண்டும். நம்தமிழகத்து இருந்த பெண்பாற்புலவர்கள் போலக்காட்டிலும் இருந்தது கிடையாது. மற்றநாட்டில் மனிதன் காடுகளிலே உலாவி மர ஆடைகளை அணிந்துவாழ்ந்த காலத்திலேயே தமிழன் நாகரீகவாழ்வு வாழ்ந்துவந்தான்.

(8-ம் பக்கம் பார்க்க)

ஆளவந்தார் அடக்குமுறைக்கு ஆளான தி. மு. க. பொதுச்செயலாளருக்கு சென்னையில் அளிக்கப்பட்ட வரவேற்புக் காட்சிகளில் ஒன்று.

8—10—50 அன்று சென்னை நுங்கம்பாக்கத்தில் பூ. கணேசன் பி. ஏ. (ஆனர்ஸ்) தலைமையில் சே. எ. மதியழகன், கே. ஆர். ராமசாமி, சி. என். ஏ. ஆகியோர் பேசிய பொதுக்கூட்டத்தின் ஒரு பகுதி

பாதிரியாகலாம், எவரும்! வேதியராக முடியாதே!!

தந்தது தங்கம்—செய்ததோ விலங்கு

ஐந்தாண்டுகளில் பிரச்சினை தீரும்

சி. என். ஏ. விளக்கவுரை

இந்தி நல்லெண்ண தூதுகோஷ்டியார் தி. மு. க. பொதுச் செயலாளரைக் கண்டு பேசியபோது நடந்த உரையாடலின் ஒரு பகுதி சென்ற வாரம் வெளிவந்தது. அதன் பிற்பகுதி இங்கு தரப்பட்டுள்ளது.

சதுர்வேதி:- பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் பிரச்சினைபற்றிய தங்கள் கருத்தென்ன?

சி. என். ஏ. :- இங்குள்ள பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதார் பிரச்சினை வேறு. வடநாட்டிலுள்ள இந்து முஸ்லீம் விஷயம் வேறு. பார்ப்பனர் தங்களை உயர்ந்தவர்களெனக் கருதுகிறார்கள். சமுதாயத்தில் அவர்கள் செல்வாக்கு அதிகம். ஆகவே, அரசியலிலும், பொருளாதாரத்திலும் அவர்களுக்கே செல்வாக்கிருக்கிறது!

சதுர்வேதி:- இந்தப் பிரச்சினை தீர வழியில்லையா?

சி. என். ஏ. :- இன்னும் ஐந்து ஆண்டுகளில் தீர்ந்துவிடலாம்.

காஞ்ச:- அதெப்படி, அவ்வளவு சரியாகச் சொல்கிறீர்கள்!

சி. என். ஏ. :- சகோதரி! அது எங்கள் ஆசையைக் காட்டுகிறது. இப்போதே முக்கிய பார்ப்பனத் தலைவர்கள் இப்பிரச்சினை முடிவு கட்டப்படவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

ராகவதாஸ்:- திராவிட நாட்டில் பார்ப்பனர்கள் நிலையென்ன?

சி. என். ஏ. :- மனித உரிமையோடு வாழ்வார்கள் அவர்களை விரட்டுவதல்ல எங்கள் நோக்கம்.

பாண்டே:- பார்ப்பனத் தலைவர்கள் இங்குள்ள இந்தப்பிரச்சினையைத் தீர்க்கமுயலவில்லையா?

சி. என். ஏ. :- முயன்றிருந்தால் பிரச்சினை வெகு சீக்கிரம் முடிந்திருக்கும். உதாரணத்துக்குச் சொல்கிறேன். இந்த 1950-ல் கூட, எங்களால், பார்ப்பனர் வசிக்கும் அக்கிரகாரத்தில் ஒரு வீடு வாங்கமுடியாது. அது மட்டுமல்ல, கோயிலிருக்கிறது. அங்கு எங்களால் பூஜை முதலாயகாரியங்களை 'அவர்கள்' மூலம்தான் செய்யவேண்டியிருக்கிறது. எங்களால் செய்ய முடிவதில்லை! அதே போலத்தான், எங்கள் சடங்குகளும்.

காஞ்சன:- ஐரோப்பாவில்கூட மதக் குருமார் இருக்கத்தான் இருக்கிறார்கள்!

சி- என்- ஏ:— அங்கு யாரும் மத குருவாக வரலாம். அதேபோல இங்கு நான் விரும்பினால், அப்துல் லதீப் ஆகிவிடலாம் ஆனால் அனந்தாச்சாரி ஆகமுடியாது- எவ்வளவு வேத சாஸ்திரங்களைக் கற்றாலும், இங்கு நான் புரோகிதராக முடியாது!

காஞ்சனலதா:- உண்மைதான்- இதே நிலைதான் வடநாட்டிலும் இருக்கிறது-

சி- என்- ஏ:— நீங்கள் அதை உணரவில்லை

ராகவதாஸ்:— தனிப்பட்ட பிராமணர்கள் இந்த விஷயத்தில் சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லையா?

சி- என்- ஏ:— எடுத்துக்கொண்டார்கள். அது அவர்களுடனேயே நின்றுவிட்டது, உதாரணமாக ராஜகோபாலாச்சாரி போன்றவர்கள்- தங்களைப் பொறுத்தவரையில் சீர்திருத்தவாதிகள் தான். ஆனால் அவர்கள் சீர்திருத்தம் அவர்களுடனேயே நின்றுவிட்டது- தங்களைச் சேர்ந்தோரையும், தங்களைப் போல ஆக்கத் தவறிவிட்டார்கள்-

சதுர்வேதி:- மனிதாபிமானம் நிறைந்தோர் இக்கொடுமைகள் ஒழியவேண்டும் என்றே விரும்புவர். சமுதாய நீதி கிடைக்கவேண்டுமென்பதை யாரும் மறுக்கமுடியாது. இதற்கு மகாத்மா காந்தியின் தத்துவமே போதுமே! பிரிவினையா கேட்கவேண்டும்.

சி. என். ஏ:- காந்தியார், நல்ல தத்துவம் தந்தார். ஆனால் இங்குள்ளோர் தங்களுக்கேற்ற வகையில் அதைத் திரித்துக் கொண்டனரே!

காந்தியார் 'ராம் ராஜ்யமாக' நாடு இருக்கவேண்டும் என்று நல்ல நாடாக அமையவேண்டும் என்ற அர்த்தத்தில் சொன்னார். ஆனால் அதைப் பரப்பும் வசதி கொண்டவர்களோ, 'ராம் ராஜ்யம்' என்றால்—இந்து ராஜ்யம்—அதாவது வருணாசிரம தர்மம் இருக்கவேண்டும், நாலு சாதிகள் இருக்கவேண்டும் என்றல்லவா திரித்துப் பேசுகிறார்கள்!

சதுர்வேதி:- உண்மைதான்.

சி. எ. ஏ:- காந்தியார் தங்கத்தைத் தந்தார். ஆனால் அதை தங்கள் இஷ்டத்திற்கேற்றவாறு நகைகளாகச் செய்துகொண்டனர்—அவரது சகாக்கள். ஆனால் இங்குள்ளோரோ அதைக்கொண்டு விலங்கைச் செய்து எங்கள் கைகளில் பூட்டிடுகிறார்கள்!

சதுர்வேதி:- டெல்லியில் கூட 'மதராசிகள்' என்றால் வெறுப்பு இருக்கிறது. எல்லா உத்யோகங்களையும் அவர்களே பிடித்துக்கொண்டதாக அதிருப்தி உலவுகிறது. பிரிவினை ஏற்பட்டால் அவர்கள் பலாத்காரத்தோடு வெளியேற்றப்படலாமல்லவா?

சி. என். ஏ:- அதை நாங்கள் எதிர்பார்க்கிறோம்—நாட்டுப் பிரிவினை என்றால் இவைகளையெல்லாம் எதிர்பார்க்கத்தானே வேண்டும்

மேலும் தொடர்ந்து, பொதுச் செயலாளரிடம் கேள்விகள் கேட்டபோது, திராவிட நாட்டில் வெளி நாட்டாருக்குள்ள மனித உரிமைகள் குறித்து விளக்கினார். கடைசியில் பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் பிரச்சினை எவ்வளவு சீக்கிரம் முடிவடைகிறதோ அவ்வளவு விரைவில் பிரிவினைக் கிளர்ச்சி அதிகமாகும் என்றும் ஏனெனில் இப்போது இந்த வேற்றுமை ஒழியவேண்டுமென்பதில் பார்ப்பனத் தலைவர்களும் சிரத்தை காட்டி வருவதாகவும், "அது வளர்ந்தால் 'இந்து' போன்ற பத்திரிகைகள் எங்கள் கோரிக்கையை விளக்கலாம். நாங்கள் பாகிஸ்தானுக்கு முன்பிருந்தே தனிநாடு கோருகிறோம். ஆனால் வட நாட்டிலிருக்கும் உங்களுக்கு, வேண்டிய அளவுக்கு, எங்கள் கோரிக்கை விளங்கியிருக்கவில்லை. காரணம், ஆங்கிலப் பத்திரிகைகள் அவர்கள் வசமிருப்பதால் எடுத்துச் சொல்லவில்லை" என்று விளக்கினார்.

கடைசியில் எல்லோரும் விடைபெற்றுக் கொள்ளுகையில், "தாங்கள், ஓய்வு கிடைக்கும் போது வடநாடு வரவேண்டும்" என்று அழைத்தனர். பொதுச் செயலாளர் தாம் முன்பே வந்திருப்பதாகவும், ஓய்வு கிடைக்கும் போது 'அவசியம்' வருவதாகவும் கூறினார்.

"நமது நட்பு வளரவேண்டும். நாங்கள் அரசியல் வாதிகள் அல்ல. சொந்த முறையில் கூறுகிறோம்" என்று, விடைபெற்றுக் கொண்டு சென்றனர்.

(உரையாடல் முழுவதும் ஆங்கிலத்தில் நடைபெற்றது.)

சிவகெங்கையிலே 'பெரு வெள்ளம்'!

மாநாட்டு நடவடிக்கைகள்

காவேரி புரண்டு, 'கங்கையிலே' சேர்ந்தது போல, இளைஞர் வெள்ளம் செப்டம்பர் 30, அக்டோபர் 1—ஆகிய இரு நாட்களிலும் சிவகெங்கையிலே குழுமியிருந்தது. எங்கு நோக்கினும் ஆர்வக் குரல்—எழுச்சிப் பேச்சு — மகிழ்ச்சி கீதம்—போர்ப்பரணி—அறப்போர் ஆய்வுரை—ஆம், 'அரும்பு மீசையினர்' பேசியவண்ணம் இங்கும் அங்கும் நடந்தபடி இருந்தனர்—காதுள்ளோர் எல்லோருக்கும் நல்ல விருந்து! முதல் நாளிலிருந்தே, திராவிடத்தின் பல பாகங்களிலிருந்தும் திராவிட வீரர்கள், வீராங்கனைகள் வந்து கூடிய வண்ணமே இருந்தனர். சென்னையிலிருந்து, தூத்துக்குடி வரையிலுமுள்ள இயக்க நாடி நரம்பு போன்ற செயலாற்றும் செம்மல்கள் எல்லோரும் கூடியிருந்தனர்—இந்த வீரக்காட்சி, கண்ணுள்ளோர் யாவருக்கும் தெவிட்டாத சுவை சொட்டும் விருந்து!

செப்டம்பர் 30ம் நாள் மாலை 4 மணிக்கு, இராமநாதபுர முதல் தி. மு. க. மாநாடு தொடங்கிற்று.

இயக்க முன்னணி வீரர்கள் பலரும், அழகான முறையிலும், மிக உயரமாகவும் அமைக்கப்பட்டிருந்த மேடையில் அமர்ந்திருந்தனர்.

முதலில் நாகூர் ஹனிபா அறந்தாங்கி யூசுப், என்.எஸ். கே. குழுவைச் சேர்ந்த கே.ஆர். செல்லமுத்து ஆகியோர் இன்னிசை வழங்கினர்.

திராவிட நாட்டுப் பண் இசைத்து முடிந்தவுடன், வழக்கறிஞர் தோழர் இராஜசேகரன் பி. ஏ., பி. எல். அவர்கள் எல்லோரையும் வரவேற்றார்.

அடுத்து, உடுமலை நகராட்சி மன்றத் தலைவர் தோழர் எம். எஸ். கனகராசன், மாநாட்டைத் திறந்து வைத்தார்.

பிறகு, வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் இராஜசேகரன் முன்மொழிய, தோழர்கள் கே. கே. நீலமேகம், அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி, காஞ்சி—மணிமொழியார், குடந்தை எஸ். கே. சாமி, காஞ்சி. கல்யாணசுந்தரம், சேலம் ஏ. சித்தையன், வை. சு. மஞ்சுளாபாய், மு. கருணாநிதி ஆகியோர் வழிமொழிய, தி. மு. க. அமைப்புக்குழுச் செயலாளர், சலியாத உழைப்பும், ஊக்கமும் கொண்ட தோழர், 'திராவிடன்' ஆசிரியர் என். வி. நடராசன் மாநாட்டிற்கு தலைமை தாங்கி, தம் உரையை நிகழ்த்தினார்.

இரவு மாநாட்டுப் பந்தலில், இசைவேந்தர் எம். எம். மாரியப்பா, தம்முடைய இசைக்குழுவினருடன் செந்தமிழிலே இசை விருந்தளித்தார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி காலை 9 மணிக்குத் தொடங்கியது. தோழர்கள் டி. கே, சீனுவாசன், கே. ஏ. மதியழகன், என். எஸ். இளங்கோ, ஈ. வே. கி. சம்பத், இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். மாநாடு மதியம் உணவிற்காக கலைந்தது.

மாலை 4 மணிக்கு மீண்டும் மாநாடு கூடி, பல முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றிற்று மாநாட்டுத் தீர்மானங்களை முன்மொழிந்தும், வழிமொழிந்தும் தோழர்கள் ஈரோடு. எஸ். அப்பாவு, இராஜமாணிக்கம், ஏ. கே. வேலன், ஞானமுத்து, மணிமொழியார், இளஞ்செழியன், டி. கே. சீனுவாசன், திருச்சி பராங்குசம், சென்னை சி. வி. ராசன், சேஷாசலம், கோவை இளஞ்சேரன், குடந்தை எஸ். கே. சாமி, வீரராகவன், கே. எஸ். இராஜமான், மதுராந்தகம் பஞ்சாட்சரம், என். எஸ். இளங்கோ, எம். எஸ். இராமசாமி, கோ. தண்டபாணி, இராம. அரங்கண்ணல், தில்லை-வில்லாளன் பேசினர்.

பிறகு, பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை, சிறை சென்று மீண்ட விவரம் குறித்தும், இயக்கத்தின் எதிர்காலம் குறித்தும் பேசினார்.

இரவு 'சந்திரமோகன்' நாடகம் நடைபெற்றது.

சிவகெங்கை, திராவிடர் இயக்க வரலாற்றிலே அழிக்க முடியாத நிலைபெற்றுவிட்டது — மறக்க முடியாத பேறு பெற்றுவிட்டது. சிறையினின்றும், பொதுச் செயலாளர், நேரடியாகக் கலந்து கொண்டது, சிவகெங்கையே! இந்தப் பெருமையைத் தேடித் தந்த செம்மல்கள், நம் பாராட்டுதல்களை அள்ளிக்கொண்டு போகவேண்டியவர்கள்.

மாநாட்டின் வெற்றிக்காக, தூங்காத கண்களும், ஓயாத கால்களும், உழைப்பை மறக்காத கரங்களும், துவளாத இதயமும் கொண்டுழைத்த வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் இராஜசேகரன், பொருளாளர் தோழர் வி. இராமலிங்கம், புயல்காற்று போல சுற்றித் திரிந்து பணியாற்றும் இன்முகச் செல்வர் — செயலாளர் இராம. சுப்பையா, துணைச்செயலாளர் சிவசண்முகசுந்தரன் விளம்பர உறுப்பினர்கள்:— க. சத்தியேந்திரன், கோ. தண்டபாணி ஆகியோரைத் திராவிடம் மறக்க முடியாது—மறக்கவில்லை!

அவர்கள் அனைவரையும் நாம் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம், நாவார, மனமார!

வெற்றிப் பட்டியல் பாரீர்!

தி. மு. க. தொடங்கி ஓராண்டு முடிந்துவிட்டது. தி. மு. க. தோழர்கள் இந்த ஆண்டில் நாம் சாதித்த சாதனைகளைத் திரட்டி மக்களுக்குத் தெரிவித்திருக்கின்றனர் — புது ஆண்டிற்கான செயற் குழுவினரைத் தெரிந்தெடுத்திருக்கின்றனர்—'திராவிடநாடு நாள்' கொண்டாடும் முகத்தான், தி. மு. க. வின் வெற்றிப் பட்டியலை, மலர்ந்த முகத்தோடு மக்கள் முன்னர் சமர்ப்பித்திருக்கின்றனர். அந்நடவடிக்கைகளைத் தொகுத்து தருகிறோம், குறைந்த அளவில், மிகச் சுருங்கிய முறையில்!

தர்மபுரி

14—9—50ல் குட்டியப்பன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் 'போர் வாள்' ஆசிரியர் மா. இளஞ்செழியன் பி. ஏ., (ஆனர்ஸ்), காஞ்சி கல்யாணசுந்தரம் ஆகியோர் பேசினர்.

மேலப்பழூர்

15—9—50ல் ஆர். செல்லப்பா தலைமையில் கூடி இவ்வாண்டு இயக்கம் சாதித்த சாதனைகளையும், இனிவரும் நாட்களில் செய்யவேண்டியனவற்றைக் குறித்தும் துண்டு வெளியீடுகள் மூலம் பொதுமக்களுக்கு அறிவிப்பதென முடிவு செய்யப்பட்டது.

சதுப்பேரி

15—9—50ல் கந்தப்பா தலைமையில் கூடி புதிய நிர்வாகிகள் தெரிந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்:— வி. கே. பெருமாள், துணைச் செயலாளர்:— கே. கந்தப்பா, விளம்பரஉறுப்பினர்:— ஆர். வி. கண்ணப்பா, டி. ஆண்டி; பொருள் காப்பாளர் எஸ். கோவிந்தசாமி, பி. குப்புசாமி மற்ற உறுப்பினர்கள்:— அண்ணாமலை, கோவிந்தசாமி, தண்டபாணி, மன்னாரு, பாண்டியன், சின்னசாமி, பெரியசாமி, மாரியப்பா, பொன்னுசாமி, தங்கவேலு, பெருமாள்.

அரியலூர்

16—9—50ல் எம். ஆர். செல்லப்பா தலைமையில் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. பேசினார். அவர் ஓராண்டில் நாம் சாதித்தவைகளைக் குறித்தும், வகுப்பு நீதியின் அவசியம் குறித்தும் நீண்டநேரம் பேசினார். மாரிமுத்து நன்றி கூறினார்.

தியாகதுருகம்

16—9—50ல் பனையபுரம் இராம—பழனிச்சாமி தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் டி. கே. சீனுவாசன் பேசினார். இரகுராமன் நன்றி கூறினார்.

மதுரை

17—9—50ல் காலை 9—15 மணிக்கு அண்ணாதுரை இலவச வாசக சாலையில் ஈ. வே. கி. சம்பத் கொடியேற்றுவித்தார். அன்று நடந்த சைக்கில் ஊர்வலத்திற் கிடையில் காரில் சம்பத், எஸ். முத்து, கே. எஸ். இராசமான், எம். வி. மணி முதலியோர் அமர்ந்திருந்தனர்.

மேங்காட்டுப் பொட்டலுக் கருகில் சம்பத் இயக்கக் கொடியை ஏற்றுவித்தார். பிறகு அழகரடி வேலாயுதம் நினைவு படிப்பகத்திலும் இயக்கக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது. மறுமலர்ச்சி மன்றத்திலும் கொடியேற்று விழா நடந்தது.

மாலை, கிருஷ்ணராயர் தெப்பக்குள மைதானத்தில், எஸ். முத்து தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் எஸ். இராசமான், ஈ. வே. கி. சம்பத் பேசினர்.

அய்யவடலூர்

17—9—50ல் என். கே. குமாரவேலு தலைமையில் ஊர்வலமும், மாலை 6-30 மணிக்கு தங்கவேலு தலைமையில் பொதுக்கூட்டமும் நடந்தன. என். வி. இராமையா இயக்கப்பாடல்கள் பாடினார். ஆர். நடராசன், எம். கோபாலசாமி, வி. எம். வேலு பேசினர்.

ஈவுஸ்ட்ரோட் (சென்னை)

17—9—50ல் என். ஜீவரத்தினம் தலைமையில் மு. கருணாநிதி, கண்ணதாசன், என் எஸ். இளங்கோ, க. அன்பழகன், காஞ்சி. கல்யாணசுந்தரம் 'திராவிட நாடு நாள்' குறித்தும், கழகம் ஓராண்டில் கண்ட வெற்றிகளை குறித்தும் பேசினர். என். கிருஷ்ணன் நன்றி கூறினார்.

கூட்டக்குளம்

17—9—50ல் தி. மு. க. ஓராண்டு நிறைவையொட்டி ஒரு ஊர்வலம் புறப்பட்டு பல தெருக்களின் வழியாகச் சென்று காந்தி மைதானத்தில் முடிந்தது. கலைப்பித்தன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில், முத்துச்சாமி கொடியேற்ற, மகாலிங்கம், டி. வி. வேலன், எஸ். வி. சையது முகம்மது பேசினர்.

மருதானை (கொழும்பு)

17—9—50ல் ஆர். ஏ. மணி தலைமையில் 'திராவிட நாடு நாள்' கொண்டாடப்பட்டது. வீ. பி. பொன்னையா, பி. டி. பாலையா, வீ. ஆர். பாண்டியன் பேசினர்.

பெரியகுளம்

17—9—50ல் தீர்த்தத்தொட்டி பூஞ்சோலையொன்றில் தி. மு. க., தி. மு. மா. க. பொதுச் செயற் குழு கூடி, அடுத்த ஆண்டுக்கு செயற் குழுவினரைத் தெரிந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்:- ப. கு. இராமசாமி, உதவிச் செயலாளர்கள்:— சு. நடராசன், எம். அனீபா, பொருளாளர்:—எம். என். முத்தலிபு, வி. உறுப்பினர்:- மு. இராதா, நிர்வாகக் குழுவினர்:— வி. ஜகன்னாதன், அ. சோமசுந்தரம், கோ. தங்கவேலு, பொ. சின்னு, ஆர். சந்தானகிருஷ்ணன், பி. இராமன்.

குடந்தை

17—9—50 கே. கே. நீலமேகம் தலைமையில் 'திராவிட நாடு நாள்' கொண்டாடப்பட்டது. போலீசாரின் ஒலிபெருக்கி அனுமதி கிடைக்காததால் ஒலிபெருக்கி யின்றியே கூட்டம் நடந்தது. சொக்கலிங்கம், வி. சின்னத்தம்பி, என். வி. நடராசன் பேசினர். நகரின் முக்கியமான ஏழு இடங்களில் கழகக் கொடி யேற்றுவிக்கப்பட்டது.

அன்று காலையில் தேப்பெருமாநல்லூரில் ராஜலிங்கம் முயற்சியினால் தி. மு. க. இலவச வாசகசாலை திறந்து வைக்கப்பட்டு, கழகக் கொடியும் ஏற்றுவிக்கப்பட்டது.

காட்டூர்

17—9—50ல் காலையில் கொடிகளேந்த, கழகத் தலைவர்களின் படங்களைத் தாங்கி, ஊர்வலமாக போடிநாயக்கன்பட்டி, ஆடிப்பட்டி ஆகிய கிராமங்களின் வழியாக சென்றது. எஸ். ஆறுமுகம், ஊர்வலத்திற்கு தலைமை வகித்து நடத்திச் சென்றார்.

மொரம்படுக்காடு அம்மாசி, ஊர்வலம் முடிவில் மிகப் பெரிய கழகக் கொடியை ஏற்றுவித்தார். சித்தையன் இன்னிசை வழங்கினார்.

மாரியம்மன் கோவில் திடலில் சாமியப்பன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் கே. ஆர். சிங்கன், இரத்தினம், இராமலிங்கம், கோவிந்தன், மாரிமுத்து, சிறுவன் சிங்கம் பேசினர்.

குன்னம்பட்டி

17—9—50ல் க. பெ. முத்துசாமி தலைமையில் நடந்த அங்கத்தினர் கூட்டத்தில், நகர கழக கட்டிட நிதிக்காக, சி. என். ஏ, நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி ஆகியோரை ஒரு நாடகம் நடத்தி புதவும்படிக் கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

திருச்சி

17—9—50ல் டவுன் ஹாலில், ஏ. பி. தர்மலிங்கம் தலைமையில் நடந்த 'திராவிட நாடு நாள்' கூட்டத்தில் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., ஜி. பராங்குசம், எஸ். நெடுமாறன் ஆகியோர் பேசினர்.

இருப்பேடு

17—9—50ல் இளைஞர்கள் பலர் ஒன்றுகூடி இயக்கக் கொடியை ஏற்றுவித்தனர். வைதிக எதிர்ப்பையும் பொருட்படுத்தாது பொங்கலின் போது தி. மு. க. திறப்புவிழா நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

வேலப்பாடி (வேலூர்)

17—9—50ல் தி. மு. க. ஓராண்டு நிறைவையொட்டி, கழகக் கருத்துரைகளை தாங்கிய அட்டைகளை ஏந்திய சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டுச் சென்று டவுன் ஹாலில் குப்புசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. வேலை - வில்லவன், கருத்தோவியன் பேசினர்.

திலக்கோட்டை

17—9—50, ஈா. அப்துல்காதர் தலைமையில் நடந்த திராவிட முன்னேற்ற இளைஞர் கழகத் திறப்பு விழா கூட்டத்தில், பி. வடிவேல் கொடியேற்ற, இ. காத்தான் திறந்து வைக்க, திருப்பூர் முருகநாதன், ராஜாராம், சையது இப்ராஹிம் சொற்பொழிவுகளோடு விழா இனிது முடிந்தது.

திண்டிவனம்

17—9—50ல் காவேரிப்பாக்கம் பெரியார் திடலில் பாண்டுரங்கம் தலைமையில் நடந்த 'திராவிட நாடு நாள்' விழா கூட்டத்தில் டி. கே. சீனுவாசன் பேசினார்

பட்டமுடையார்புரம்

17—9—50ல் வைகுண்டராமன் தலைமையில் முதலாவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது. முத்து, இளங்கோ, சு. க. ராசன், கா. மு. முத்து பேசினர். (தொடரும்)

சென்னையில் எழுத்துரிமைப் போர்!

நூல் விற்றது 'குற்றமாம்!'

மூன்று வாரக் கடுங்காவல்

'ஆரியமாயை' 'ஆரியமாயை' என்று கூவினர், அந்தக் கட்டிளங்காளைகள்! 'ஆட்சியாளரை ஆட்டி வைக்கும் ஆரியமாயை' 'அடக்குமுறை ஏவிக் காத்த ஆரியமாயை' 'திராவிடன் வாழ்வைப் பறிக்கும் வகைவிளக்கும் ஆரியமாயை' 'எங்கள்பொதுச் செயலாளரைச் சிறைக்கனுப்பிய ஆரியமாயை!' —என்று அடுக்கடுக்காக சொற்களை வீசியபடி இருந்தனர் அவர்கள் — மக்கள் திரள் திரளாகக் கூடியபடியே இருந்தனர்.

'காந்தியார் சாந்தியடைக' வேண்டுமா? வகுப்பு வெறியர்களின் கோரக்கூத்தை அம்பலமாக்கிய 'காந்தியார் சாந்தியடைக' வாங்குங்கள்! ஆசைத்தம்பியின் சிலையைக்கெடுத்த 'காந்தியார் சாந்தியடைக' படியுங்கள்!—அந்த 'அரும்பு மீசையினர்' அழகழகாக விளக்கியபடி நின்றனர்.

போலீசாரின் படை வரிசை நெருங்கிக் கொண்டே இருந்தது. அவர்கள் மலர்ந்த முகத்திலே இன்னும் மகிழ்ச்சி தாண்டவமாடிக் கொண்டே இருந்தது.

26—9—50ல் சென்னை வண்ணாரப்பேட்டை தி. இளைஞர் மன்றத்தினர்கூடி ஆட்சியாளர் பேச்சுரிமையைப் பறித்திடும் வகையில் எடுத்துள்ள நடவடிக்கைகளை எதிர்த்து அறப்போர்தொடுத்துவிடுவது என்று முடிவு செய்தனர். அதைபொது மக்களுக்கும், ஆட்சியாளருக்கும் அறிவித்தும் விட்டனர்.

அறப்போர் வீரர்கள், எஸ். வி. மணி, பி. மணி, ராஜா, ஆகிய மூவரும், வழக்கு தொடரப்பட்டுள்ள நூல்களான 'ஆரியமாயை' 'காந்தியார் சாந்தியடைக'—இரண்டையும், நல்ல மக்கள் கூட்டத்திற்கிடையில் நின்று விற்றனர் — விலை கூறியபடி இருந்தனர் — அதில் புதைந்துள்ள கருத்துக்களைப் படித்துக்காண்பித்தனர்—விளக்கினர்!

கூடியிருந்த மக்களோ, உணர்ச்சி வேகத்தால் வாழ்த்தொலிகளை வானதிர முழக்கினர்.

மூவரையும் போலீசார் கைது செய்தனர். அவர்களுக்கு மலர்மாலையிட்டு மக்கள் சமுத்திரம் வாழ்த்துக்களை அலையோசையும் தோற்றிடும் வகையில் எழுப்பினர். வீரர்களோ, வீதியிலே இலட்சிய வெறியைக்காட்டி, முகத்திலே தன்னும் மகிழ்ச்சியைத் தவழவிட்டு லாரியிலே ஏறினர்.

அன்று 11-மணிக்கு அவர்கள் மூவருக்கும், நூல்விற்ற குற்றத்திற்காக மும்மூன்று வாரக் கடுங்காவல் தண்டனை தந்திடுமாறு நிருபிக்கப்பட்டதன் பேச்சுரிமையால் மீட்டமேறிய நூலைக்காரர்!

திராவிட நாடு

ஞாயிறு] 22 10—50 [காஞ்சி

‘விதவையின் வேதனை’

—*—

நரம்புகள் தளர்ந்து, நரை வளர்ந்து, தள்ளாடி, தத்தளித்து, ஊன்றுகோலோடு, உலவ வேண்டிய கிழ விதவையாகி விட்டது-காங்கிரஸ். உள்ளுக்குள்ளேயே சண்டையும், ஒருவர்க்கொருவர் கூச்சலும், பதவி வேட்டையும், சுயநலப் போட்டியும் ‘தள்ளாடும் கிழவி’யை, ‘இப்பொழுதோ இன்னும் கொஞ்ச நேரத்திலோ’ என்கிற கேவல நிலைக்கு இழுத்துச் சென்று கொண்டிருக்கிறது.

ஆர்ப்பரித்து - அரசியல் வெற்றிக்குப் பாடு பட்ட காங்கிரசின் அத்தியாயம் முடிந்துகொண்டிருக்கிறது. நாசிக் மாநாடும், அதற்குப் பின் காரியக் கமிட்டி அமைக்க தலைவர் தாண்டன், தாண்டவேண்டியிருந்த நிகழ்ச்சிகளும், இதை விளக்கும், உண்மைக் காட்சிகளாம்!

வலுவிழந்து, மக்களால் மூக்கறுக்கப்படும் ‘முத்தண்ணுக்களின்’ கூட்டுவேட்டை மடமாகி விட்ட, காங்கிரசைக் கண்டு பரிதாபமே ஏற்படும் —இரக்க சிந்தையுள்ளோருக்கு.

கூறிய உறுதிகளை நிறைவேற்றத் தவறியும், ஆட்சிபீட மேறியதும் அட்டகாசப் பாதையில் புகுந்தும், ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பதற்குப் பதில் இன்னல்களை வீசியும், ‘சித்தன் போக்கு சிவன் போக்கு’ என்று காங்கிரஸ், சென்றதன் விளைவாக — செல்வாக்கிழந்து சீரழிந்து வருகிறது!

உள்ளத்தில் தூய்மையும், உணர்ச்சி வேகமும் கொண்டு பணியாற்றும் முற்போக்குக் கட்சிகள் வசம், மக்கள் மனம் திரும்பி வருகிறது. தென்னாட்டைப் பொறுத்தமட்டில், இளைஞர்களின் இதயக் கோட்டையான. நமது கழகம் மக்கள் ஆதரவால், புன்சிரிப்போடு, தன் கொள்கை மணம் வீசி வளர்ந்துகொண்டே போகிறது!

இந்த வளர்ச்சியைக் காணும் ‘வக்கிரங்கள்,’ ஆங்காங்கே ஆத்திரமூட்டக்கூடிய நடவடிக்கைகளில் இறங்கி வருவதாக நமக்குத் தகவல்கள் வந்தவண்ணமே யுள்ளன.

கிழவி—சீறுகிறாள்! கிழவி தன் கையிலிருக்கும் ‘ஆட்சி’ என்கிற தடியைத் தூக்கி வீசுகிறாள்!!

நல்லோர் நகைக்கக்கூடிய செயல், எனினும் நாடோறும் நிகழ்கிறது, இங்கு.

நமது கழகப்பணிக்கு, குந்தகம் விளைவிக்கும் நோக்குடன் செல்வாக்கிழந்த காங்கிரஸ் கட்சியினர் ‘வேதனைப்பாதை’ நோக்கி விரைகின்றனர்.

ஆட்சி தங்கள் கையிலிருப்பதால், அதிகார ஈட்டியை ஒருபக்கம் வீசுகின்றனர்!

இன்னொரு பக்கம் கூலிகளையும் காலிகளையும் பிடித்து ‘ஆகஸ்டு’வீரத்தில் இறங்குகின்றனர்!

x x x

மதுரையில், இருட்டியநேரத்தில் 14-10-50 அன்று, மேங்காட்டுப்பொட்டலில் இருந்த கழகக் கொடியை இறக்கி, கம்பத்தைத் துண்டாக்கியிருக்கின்றனர்! சாதாரணமாக அல்ல, அரிவாள் கம்புகளோடு வந்து! அகிம்சாவாதிகளல்லவா—பக்கத்தில் கடைவைத்திருக்கும் கழகத்தோழர் ஒருவரையும் தாக்கியிருக்கின்றனர்!

மதுரையில் மட்டும் என்றல்ல, திருச்சி தூத்துக்குடி, விருத்தாச்சலம், அதிராம் பட்டினம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் காங்கிரஸ் கட்சியினர் நடந்து கொள்ளும் போக்கு வார்த்தைகளால் வர்ணிக்கக் கூடியதல்ல.

‘பொதுக் கூட்டம்’ போட்டு ‘நாற்றத்தை’ வீசுகின்றனர்! ‘தூ, தூ’ என்று, இகழ்ந்துரைக்குமளவு ‘கேவலத்தை’ எட்டிப்பிடிக்கின்றனர்! ‘இரவு நேரத்தில்’ ஏதாவது தங்கள் கூலிகளைக் கொண்டே செய்துவிட்டு நம்மீது பழியைப் போடுகின்றனர்! காஞ்சியில் பெரியார் வந்து பேசிய கூட்டத்துக்கு முதல்நாள் ‘நேரு மார்க்கட்’டில் நிகழ்த்தியிருக்கும் சம்பவம் இந்தவகையைச் சேர்ந்ததுதான்!

வளர்ந்துவரும் நம்மைக்கண்டு, சூரியனைக் கண்டு ஏதோ ‘என்னமோ’ செய்ததாமே அதுபோல, இறங்குகின்றனர்!

‘சில்லரைகள்’தானே — என்று, நாம், இவைகளையெல்லாம் ஒருபுறமொதுக்கிக் கொண்டே, சென்றுகொண்டிருக்கிறோம். ஆத்திரத்தால் மோதிக்கொண்டேயிருக்கும் ‘ஆடுசுபாவத்தினரையும்! ஆட்சி அகங்காரத்தால் வீண்வம்புக்கிழுக்கும் ‘விதவை’க் கட்சியினரையும்’—காண நாம் ஆத்திரங்கொள்ளவில்லை! காரணம், நமது பணி மகத்தானது. மலையைப்புரட்டிட வேண்டிய நேரத்தில் ‘எலிகளுக்கும் முயல்களுக்கும்’ போராடுவது வீண்வேலை என்பதை நாம் அறிவோம்.

மோத வரும், ‘சில்லரை’கள் மூக்காடிட்டு மூலைக்குச் செல்லும் காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது என்பதையும் நாம் அறிவோம்.

எனினும், பொது'வாழ்வு என்கிற களங்கமற்ற நீரைக் கலக்கிச் சேறுக்க முனையும் ‘இதுகளை’க் காணும்போதுதான், நமக்கு வேதனை அதிகமாகிறது.

‘நம் வழியில் நாம் போவோம், அவர்கள் வழியில் அவர்கள் செல்லட்டும், மக்கள் இருக்கிறார்கள் உண்மைக்கு மதிப்பளிக்க’ என்று நினைத்து தங்கள் கட்சிக் கொள்கைகளைப்பற்றி பிரச்சாரம் செய்துகொண்டு போவதைவிட்டு நம்மைப் பார்த்துப் பார்த்துச் சீறுகின்றனர்! நமது வளர்ச்சியைக் கண்டு ‘குறுக்கு வழிகளி’லெல்லாம் பாய்கின்றனர்!!

இந்த வழிகள் கேவலமானவை மட்டுமல்ல— ஆபத்தையும் தரக்கூடியவைகளாகும். நாட்டு வாழ்வும், பொதுப் பணியும், இதுபோன்றவைகளால் அலைக்கழிக்கப்படுவது நல்லதல்ல —ஒழுங்கையும் நீதியையும் உதவாக்கரையாக்குவதாகும்.

கட்சி மட்டுமல்ல வாழ்வு—வாழ்வு பெரிது. ஒழுங்கும், மனத்தூய்மையுமே முக்கியம். இதை மறந்தால் எதிர்காலம் இருண்டுவிடும்.

வேதனைப் பாதையில் கூத்தாடும் ‘விதவைகள்’ இதனை உணரவேண்டும்! குத்திவிடும் புத்திகொண்டோர், இதனை அறிய வேண்டும்!!

*

களிப்பூட்டும் செய்தி

இனஎழுச்சிச் செய்திகள்
உரிமை முழக்கங்கள்
அரசியல் அலைகள்

அகில உலக நிகழ்ச்சிகள்
அறிவுலகக் காட்சிகள்
ஆளவந்தார்விசித்திரங்கள்

தாங்கி

பெரிய அளவு திராவிடநாடு விலை அணா 1.

தினசரி, வெளிவருகிறது.

ஆசிரியர் சி. என். அண்ணாதுரை

பி. டி. ஐ. (ராய்ட்டர்) செய்திகள் உண்டு

உரிமைவேட்கையின் புது முரசு!
அறிவுப் பணிக்கு ஒரு வழிகாட்டி!
மக்கள் மன்றத்துக்கோர் விடுதலை ஒலி!

முன்பணத்துடன் எழுதும் ஏஜண்டுகளுக்கே முதற்சலுகை. “திராவிடநாடு” வார இதழ் ஏஜண்டுகள், முன்பணம் அனுப்பினால், அவர்களே முதலில் கவனிக்கப்படுவர். விவரங்களுக்கு சென்னை அலுவலகத்துக்கு எழுதவும்.

நிர்வாகி:—

“திராவிடநாடு” தினசரி அலுவலகம்
202, தங்கசாலைத்தெரு
சென்னை 1.

எமது கண்டனம்

காஞ்சியில், பண்டிதநேரு அவர்கள் பெயருடன் இருக்கும் மார்க்கட்டிலுள்ள அவரது படத்தையும், பெயரையும் யாரோ சில விஷமிகள், 10—10—50 இரவு அழித்திருக்கின்றனர். மேற்படி சம்பவத்தை, உள்ளூர் காங்கிரஸ்காரர்கள் வேண்டுமென்றே, விஷமத்தனமாகத் திரித்துக் கூறித் திரிகின்றனர்.

மேற்படி சம்பவத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் மூலம் நாங்கள் கண்டித்திருக்கிறோம்.

இரகசியமாக இதுபோன்ற ‘போர்டு அழிப்புத் திட்டம்’ எங்கள் கழகத்தில் கிடையாது என்பதும், நாங்கள் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்து கோயில்பட்டியில் தி. மு. க. மத்திய செயற்குழு தீர்மானித்திருப்பதும் மக்கள் அறிந்ததாகும்.

வெளிப்படையாக, எந்த நடவடிக்கையையும் அறிவித்து விட்டுச் செய்யும் திட்டம் எங்களுடையது.

ஆகவே, மேற்படி நிகழ்ச்சிக்குக் காரணமான விஷமியை நாங்கள் கண்டிக்கிறோம்—என்பதோடு, நீதியற்ற முறையில் எங்களைத் தொடர்புபடுத்திப் பேசுவது, வேண்டுமென்றே செய்யும் துஷ்பிரச்சாரம் என்பதையும் அறிவித்துக் கொள்கிறோம்.

திராவிட முன்னேற்ற கழகம் காஞ்சிபுரம். | சே. கோ. பெருமாள் செயலாளன்.

காஞ்சியில்!

22—10—50 ஞாயிறு மாலை 6 மணிக்கு புத்தேரித்தெரு, தி. மு. க. பகுத்தறிவுக் கழகத் திறப்பு விழா, எம். ராஜு தலைமையில் நடைபெறும். தஞ்சை ஏ. கே. வேலன், சி. வி. எம். அண்ணாமலை, ஆர். கே. மூர்த்தி, கே. டி. எஸ். மணி, தில்லைவில்லாளன் பி. ஏ. (ஆனர்ஸ்) பேசுவர்.

வடஆற்காட்டில் நமது முழக்கம்

ஆங்காங்கே ஆர்வ உணர்ச்சி

கருணாநிதி சுற்றுப் பயணம்

குடியேற்றம்

13-10-50 மாலை 6 மணிக்கு (வ. ஆ.) குடியேற்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் துரையரசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஜெயராமன் என். எஸ். கே. குழுவின் தோழர் செல்லமுத்து ஆகியோரின் இயக்கப் பாடல்களுக்குப் பின் தோழர் மணிஎழிலன் சொற்பொழிவாற்றினார். பின் தோழர் மு. கருணாநிதி நாட்டு நிலைமை பற்றி விரிவுரையாற்றினார். இளங்கோ மன்றத்தின் சார்பாக கருணாநிதிக்கு வரவேற்பு இதழ் வாசித்து அளிக்கப்பட்டது.

ஆம்பூர்

14—10—50-ல் (வ. ஆ.) ஆம்பூரில் மாலை 6மணிக்கு நடைபெற்ற பல்லாயிரக் கணக்கான மக்களடங்கிய பொதுக் கூட்டம் தோழர் சௌந்தரராசன் தலைமையில் தொடங்கியது. என். எஸ். கே. குழுவின் தோழர் செல்லமுத்து இயக்கப் பாடல்கள் பாடினார். பின்னர் தோழர் மு. கருணாநிதி கழகத்தின் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் அரசியலாரின் அடக்குமுறை சட்டங்களை விளக்கியும் தடையுத்தரவுகளை மீறுவது பற்றிய விளக்கங்களையும் திராவிட நாடு பிரிவதற்கான காரணங்களையும் விவரித்துப் பேசினார்.

கஸ்பா

வேலூர் கஸ்பா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆண்டு விழா 15—10—50 காலை 9-30-மணிக்கு தோழர் புலவர் கோவிந்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கம்யூனல் ஜி. ஓ. பற்றியும், திராவிட நாட்டுப் பிரிவினை பற்றியும் தலைவர் சொற்பொழிவாற்றினார். தோழர் கண்ணதாசன் கொடியேற்றிவைத்து வருங்கால போராட்டத்துக்கு வாலிபர்களைத் தயாராயிருக்க—முன்னேற்றக் கழகத்தின் கொடியின் கீழ் திரண்டுவரக் கேட்டுக்கொண்டார். பின் தோழர் மு. கருணாநிதி பேசினார். கஸ்பா முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கருணாநிதிக்கு வரவேற்பு பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. சில விஷமிகளால் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களுக்குப் பதில் கூறி திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஓராண்டு வளர்ச்சியையும்—"துரோகிகள் என்றார்கள் துவண்டுவிடவில்லை. சதிகாரர்என்றார்கள்சாய்ந்துவிடவில்லை...வளருகிறோம்...வளருகிறோம்...வடநாட்டிலிருந்து தூது கோஷ்டி, காஞ்சி நோக்கி வருகிற அளவுக்கு வளர்ந்துவிட்டோம்" என்று குறிப்பிட்டுச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

நகரில் ஊர்வலம்

அன்று மாலை 4½ மணிக்கு தோழர் கருணாநிதியும் தோழர் கண்ணதாசனும் காரில் அமர்த்தப்பட்டு ஏராளமான தொண்டர்களும் மக்களும், கொடிகளும் புடைசூழ சிறந்த ஊர்வலம் வேலூர் நகரின் முக்கிய இடங்களிலெல்லாம் சென்று முன்னேற்றக் கழகத்தின் முழக்கத்தை எதிரொலித்தது. வழிநெடுகத்தோழர்கட்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன.

கோட்டை வெளிக்கூட்டம்

தொடர்ந்து வேலூர் கோட்டை வெளி மைதானத்தில் மாலை 6½ மணிக்கு லட்சத்துக்கு மேற்பட்ட மாபெரும் பொதுக்கூட்டம் ஆரம்பமாகியது. கோலாகலமாக அலங்கரிக்கப்பட்ட மேடை. மேடையிலே மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஒளிவிடும் 'திராவிடம் நமது நாடு' என்ற அழகான எழுத்துக்கள். ஆர்வந்ததும்பும் வாலிபர்கள். N. S K. குழுவினைச் சேர்ந்த தோழர் செல்லமுத்து இயக்கப் பாடல்கள் பாடினார். மற்றும் பல நண்பர்கள் பாடினார்கள். நீண்ட ஆரவாரத்தினிடையே தோழர் போளூர் சுப்ரமணியம் தலைமை தாங்கினார். தோழர் கண்ணதாசன் ஆளவந்த மந்திரிகளின் அறிவுத் திறனுக்கு அருமையான ஆதாரங்கள் காட்டி மக்களை உணர்ச்சி வெள்ளத்தில் மிதக்கவிட்டார். தோழர் புலவர் கோவிந்தன் அரசியலின் நிலையையும் பொருளாதார சீர்கேட்டையும் உணவுப் பிரச்னைகளையும் தெள்ளத் தெளிய விளக்கினார்.

பின் நீண்ட கைதட்டலுக் கிடையே தோழர் மு. கருணாநிதி பேச ஆரம்பித்தார். 'வீர பாண்டிய கட்ட பொம்மன்' கழகத்தினரின் சார்பாக கருணாநிதிக்கு வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது. பேசிய தோழர்கள் அனைவருக்கும் ஏராளமான மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

கருணாநிதி பேசும்போது இங்கு கூடியுள்ள லட்சம் மக்களை எதிரிகள் பார்த்தாவது முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியைத் தெரிந்துகொள்ளட்டுமென்றும் — விஷமிகளும் வீணர்களும் வீரத்தின் முன்னே நெருங்க முடியாது என்றும்—அண்ணா தரும் திட்டங்களே—திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களே—நாட்டை யாளுமென்றும், விரைவில் நடைபெறப் போகும்-நடந்து கொண்டிருக்கிற நமது போராட்டத்தில் கலந்துகொள்ளத்திராவிடமக்கள் திரளாக வருமாறும் கேட்டுக்கொண்டு விரிவுரையாற்றினார்.

இரவு நாடகம்

அன்றிரவு, 10-மணிக்கு இயலிசை நாடக சபையாரால் முள்ளிபாளையம் தியேட்டரில் தோழர் நடராசன் எழுதிய 'என் தங்கை' நாடகத்துக்கு தோழர் மு. கருணாநிதி தலைமை வகித்து நாடகத்தை பாராட்டிப் பேசினார். தோழர் கண்ணதாசன் நாடகத்தைப் பற்றியும் நடிகர் உலகைப் பற்றியும் பேசினார். கூட்டங்களிலும் நிகழ்ச்சிகளிலும் வேலூர் திராவிடன் பதிப்பகம் கோ. திருட்டினன் உடனிருந்து ஒத்துழைத்து வருகிறார்.

தோழர்களுக்கு!

"திராவிடநாடு" தினசரி இதழ் புதிய முறையில், பெரிய அளவில் சென்னையிலிருந்து வெளியாகும்.

"திராவிடநாடு" வார இதழ் வழக்கம் போல, சிறந்த அம்சங்களுடன் காஞ்சியிலிருந்தே வெளிவரும்.

28—10—50

ஆரணிக்கு அடுத்த திருமணியில்

என். வி. நடராசன்

பேசுவார்.

—பகுத்தறிவு இளைஞர் கழகம்.

சுயராஜ்யமே சுயராஜ்யம்!

எழுத்துரிமை படும்பாடு

'திராவிடநாடு' தினசரிக்கு ஜாமீன்

கட்டப்படும் காரணங்கள்

10—10-50 அன்று சென்னை பிரதம மாகாண மாஜிஸ்டிரேட்முன்பு சி. என். ஏ. 'திராவிடநாடு' தினசரியை அச்சிட்டு வெளியிடுபவராகப் பதிவு செய்துகொண்டார்.

அதுபோது பத்துநாட்களுக்குள் ரூ. 1000 ஜாமீன் தொகையாகக்கட்ட வேண்டும் என்று, ஆளவந்தாரால், கட்டளையிடப்பட்டது.

இந்த ஜாமீன்தொகை கோரப்பட்டதற்கு, மேற்படி உத்தரவில் காட்டப்பட்டிருக்கும் காரணங்கள்:—

1. திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளராக இருக்கும் சி.என். அண்ணாதுரை, மந்திரிகள் வருகையின் போது கருப்புக்கொடி ஆர்ப்பாட்டமூலம் சட்டம், அமைதி ஆகியவைகளில் தலையிடக்கூடும்.
2. இந்திய வகுப்பினரிடையும், இந்தியருக்கு விரோதமாகவும் துவேஷத்தையும், விரோத உணர்ச்சியும் உண்டாக்கலாம்.
3. சுதந்திர திராவிடஸ்தான் இலட்சியம் குறித்து பரப்பக்கூடும்.

எனவே, மேற்கூறிய காரணங்களால் வெளியிட விரும்பும் புதுப்பத்திரிகை, நாட்டின் பாதுகாப்புக்குப்பங்கம்விளைவிக்கும் வகையை செய்யக் கூடுமென்று கருதுவதால், இந்திய பத்திரிகை, அவசரச்சட்டம் 7-வது பிரிவின்கீழ் ரூ. 1000 ஜாமீன் கட்டவேண்டுமென, பிரதம மாகாண மாஜிஸ்டிரேட்டாகிய நான் கருதுகிறேன்.

வருந்துகிறோம்

3—10—50ல் மதுரையில் நடைபெற்ற சந்திரமோகன் நாடகத்திற்கு இயற்கை விளைவித்த கெடுதலால் குறித்தநேரத்தில் நாடகம் நடத்த முடியாமற்போனதுடன்,பலசங்கடங்களுக்கு மத்தியில் நடுநிசியில்நாடகம்நடத்தவேண்டியநிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டதின் பயனால் டிக்கட்டுகள் வாங்கி வைத்திருந்த பலதோழர்கள் அன்றுதினம் நாடகம் பார்க்கமுடியாமற்போய்விட்டதெனத் தெரிய வருகிறது. அம்மாதிரி டிக்கட்டுகள் வைத்திருக்கும் தோழர்கள் தங்களிடமுள்ள டிக்கட்டுகளைப் பத்திரமாய் வைத்திருக்கும்படியாகவும், விரைவில் மீண்டும் அத்தகைய சந்தர்ப்பத்தை உண்டாக்கி வைக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்வதுடன் எதிர்பாராது நிகழ்ந்த இந்நிகழ்ச்சிக்கு வருந்துவதுடன் அன்பர்கள் பொறுத்தருள வேண்டுகிறேன்.

M. அய்யாசாமி,
செயலாளர், தி. மு. கழகம், மதுரை நகர்க்கிளை.

அண்ணா பகுத்தறிவு படிப்பக நிதி

புதுக்கோட்டை, ராஜாவில் 28—10—50 சனி இரவு 10 மணிக்கு

★ "பகுத்தறிவின் பரிசு" ★

நாடகம் நடைபெறும்

நாடகப்புலவர் மு. கருணாநிதி, கவிஞர் கண்ணதாசன், புலவர் குழந்தையா, T K. சீனிவாசன் ஆகியோரும் மற்றும்பலரும் நடிப்பர்.

'மந்திரி குமாரி' 'திகம்பர சாமியார்' புகழ் மாஸ்டர் சுப்பையா, சிவசூரியன் பங்கு கொள்வர்.

கதை, வசனம்:	தயாரிப்பு	பாடல்
மு. கருணாநிதி,	தமிழ்ச்சேரன்	சோமசுந்தரம்

(Ad) டிக்கட்:- 2—14—0, 2—0—0, 1—0—0.

ஆளவந்தாரின் அடக்குமுறை தர்பார்!

அதிராம்பட்டினம் இளங்கோ கண்டனம்

தமக்களித்த பதவியை வீசியெறிந்தார்!

அதிராம்பட்டினத்தில் 29—9—50ல் நடைபெறவிருந்த திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டத்திற்கு, காங்கிரஸ் 'சர்தார்'களின் தூண்டுகோல்காரணமாக, 144 தடையுத்தரவு போடப்பட்ட நிகழ்ச்சியை தோழர்கள் அறிவார்கள்.

மேற்படி பொதுகூட்டம் நடைபெறமுயற்சி எடுத்துக்கொண்டவரான தோழர் என். எஸ் இளங்கோவும், அன்று மேற்படி கூட்டத்திலே பேச இருந்தார். தோழர் இளங்கோ, நமது பிரச்சாரக்குழுவின் முன்னணி வீரர்களிலே ஒருவர். அவரும் தோழர்கள் மு. கருணாநிதி, கண்ணதாசன் ஆகியோரும் பேசவிருந்த மேற்படி கூட்டத்துக்குப் போடப்பட்ட தடையுத்தரவுக்கு 'சட்டமும் அமைதியும் பங்கப்படும்' என்பதாக ஆளவந்தார் காரணமாகக் காட்டியிருந்தனர்.

தோழர் இளங்கோ, அதிராம்பட்டினத்து கௌரவ பெஞ்சு மாஜிஸ்டிரேட்டாக இருந்தவர். அதோடு தற்போது ஊர்ப்பாதுகாப்புக் கமிட்டியின் தலைவராகவும், ஆளவந்தாரால் நியமனம் செய்யப்பட்டு — நகரின் சட்டம், அமைதி ஆகியவைகளுக்கான பொறுப்பாளராக அதிகாரிகளுக்குப் பெருந்துணையாக நின்றவர். ஊரில், கௌரவமும், மக்கள் பாராட்டும் பெற்ற முக்கியஸ்தர்.

அவருக்கு 144' ஊர்ப்பாதுகாப்புக்கமிட்டித் தலைவர்மீது அடக்குமுறை! சட்டம் அமைதியை நிலைநாட்ட அதிகாரிகளுடன் பலஆண்டுகாலமாக ஒத்துழைத்தவர் பேசினால் 'சட்டமும் அமைதி'யும் பங்கப்படுமாம்!

விசித்திரமானபோக்கு! அநாகரீகமான சம்பவம்!! காங்கிரஸ் ஆளவந்தாரின் கண்ணியம் காற்றில் பறப்பதற்கோர், நல்ல, எடுத்துக்காட்டு.

கண்ணியமிழந்த காங்கிரஸ் ஆட்சியாளருக்குப்புத்தியூட்டும் வகையில், தனக்களிக்கப்பட்டிருந்த பதவியை உதறித்தள்ளி, தனது 'சன்னத்தை'யும் திருப்பியனுப்பியிருக்கிறார். திருப்பியனுப்பியபொழுது, ஆளவந்தாரின் போக்கைக் கண்டித்தே, தமக்களிக்கப்பட்ட பதவியை ராஜினாமா செய்வதாக, விரிவான கடிதம் ஒன்றும் எழுதியிருக்கிறார்.

தோழர் இளங்கோ, தமது பதவியை ராஜினாமா செய்து பொதுமக்களுக்கு அதற்கான காரணத்தை விளக்கி விடுத்திருக்கும் துண்டறிக்கையில் கூறியிருப்பதாவது:—

"நான் காலித்தனத்தையும்—அராஜகத்தையும் என்றுமே கையாண்டதில்லை. கையாளுவதால் வெற்றிகிட்டும் என்று நம்புபவனும் அல்ல. நான் பலஆண்டுகள் கௌரவ மாஜிஸ்ட்ரேட்டாகப் பதவி வகித்திருக்கிறேன். கிளர்ச்சியும், அராஜகமும் தோன்றியபோதெல்லாம் என் பொறுப்புணர்ந்து கடமையை எண்ணி கட்டுப்படுத்தியிருக்கிறேன். இருந்துகூட நான்பேசக்கூடாதாம்.

அரிசி இல்லாமல் பட்டினிபட்டாளம் தெரு, தெருவாய் அலைகிறதே அப்பொழுது காட்டாத கிளர்ச்சியை, ஈவு இரக்கம் இன்றி நாட்டின் நானா பகுதிகளிலும் தொண்டர்கள் சுட்டுத்தள்ளப்பட்டபோது மக்கள் காட்டாத கிளர்ச்சியை, நான் பேசுவதால் காட்டுவார்களாம். கூறுகிறார்கள், சட்டத்தையும், அமைதியும் காப்பாற்றுகிற ஆளவந்தார்கள். கிளர்ச்சியையும் கலகத்தையும் அடக்குவதற்கு பத்துகோடி ரூபாயை மான்யமாக அள்ளிக்கொட்டும் சர்க்கார்—போலீஸ் பட்டாளத்தை அடுக்கடுக்காக வைத்திருக்கிற சர்க்கார் கூறுகிறது நான் பேசினால் கிளர்ச்சி ஏற்படுமாம்!

பட்டம் பதவியிலிருந்து—5 ஏக்கர் நிலமும் தந்து, போதாதற்கு நமது வரிப்பணத்திலேயே 400-க்கு மேற்பட்ட பிரச்சாரர்களை (மதுவிலக்கு என்ற பெயரால்) நியமிக்கத் திட்டமிட்டுள்ள சர்க்கார் கூறுகிறது—நாங்கள் பேசினால் கலவரம் ஏற்படும் என்று!

எவ்வளவு பரிதாபம்!!

இதைக்காணும்போது, இந்தச் சர்க்காரின் நடவடிக்கையில் எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை அமைதியைக் காப்பாற்றும் திறமை அதனிடம் இல்லை என்றே கருதுகிறேன்.

எனவே, அண்மையில் அதுவும் 144 என் மீது வீசப்பட்ட, ஒரு மாதத்திற்கு முன்பு, எனக்களிக்கப்பட்ட ஊர்ப்பாதுகாப்புக் கமிட்டியின் தலைமைப்பதவியை (President, village vigilance committee) 4—10—50 தேதியோடு ராஜினாமா செய்கிறேன். எனக்களிக்கப்பட்ட "சன்னதை" இன்றே திருப்பியும் அனுப்புகிறேன்."

—X—

"சங்குநாதம்"

திராவிடர் முன்னேற்றத்திற்கென சிவகெங்கையிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த "சங்குநாதம்" வார இதழை அச்சிட்டுவந்த அச்சகத்தினர், இடையிலே செய்த முரண்பாடு காரணமாக சங்குநாதத்திற்கென சொந்த அச்சகம் அமைக்கும் பணியிலீடுபட்டுள்ளோம். 'சங்குநாதம்' தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டு நவம்பர் இரண்டாவது வாரத்தில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் செய்து வருகிறோம். வாசகத்தோழர்களும், சந்தாநேயர்களும் பொறுத்தருளவேண்டுகிறோம்.

—நிர்வாகி, "சங்குநாதம்"

திக்கெட்டும் பரவி வருகிறது தீ!

'செய், பேசாதே! செய்—நன்றே செய், அதனையும் இன்றே செய்!' என்று துடிக்கின்றனர் மக்கள். சாதிகளை நாம் ஒழித்திட வேண்டும் என்று கூறினோம், கூறுகிறோம்! 'ஆகா, இன்னமும் ஒழியவில்லையா?' என்று சுடர் முகம் தூக்கி, மீசையை முறுக்கி மேலே ஏற்றி தங்களைச் சுற்றிலும் பார்க்கிறார்கள். காபி ஓட்டல்களில் தொங்கும் விளம்பரப் பலகைகள் அவர்களின் கண்களில் படுகின்றன. நம் இயக்க எண்ணங்களை ஏற்றியிருக்கிறோம், அவர்களின் தூங்கிய உள்ளங்களில்—ஆனால் இன்னமும், அவர்களை எதையும் அவசரப்பட்டு செயல்படுத்த என்று தூண்டவே இல்லை! 'பிராமணாள்' 'இந்து' 'முஸ்லீம்' என்று இணைத்திருப்பதைப் பார்க்கும் பொழுது ஆத்திரமடைகின்றனர் அவர்கள்—கோபத்தோடு சிலர், கேலியோடு சிலர், சிந்தனையோடு சிலர், அலட்சியத்தோடு சிலர் இந்த அறிவிப்பு பலகைகளைப்பார்க்கின்றனர். ஆம் ஆனால் காலையிலே சாதிப் பெயர்கள் மறைந்துவிடுகின்றன. சாதிப் பெயர் இன்று, நாளை தனி ஜாதிகள் மட்டும் ஏன் ஒரு தொழில் செய்யவேண்டும், சமைக்க, எடுத்துவைக்க அவர்கள் மட்டுந்தான் அருகதையுடையவர்களோ என்று கேட்டிடும் நிலையும் வந்திடவேண்டும் என்று எதிர்பார்த்து நிற்கின்றனர். ஆட்சியாளர், தங்களின் திறக்காத திருவிழிகளைத் திறந்து, இந்தத் தீவிரமாக பரவியிருக்கும் விழிப்புணர்ச்சியைப் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்தி ஏகாதிபத்தியம் இங்கு கூடாது—எந்த உருவிலும், எந்த அளவிலும், எந்த இடத்திலும், எந்த காலத்திலும்!—என்று நாம் சொல்லிவிட்டோம். இது நம்மைப் பற்றிய வரையில் 'தீர்ந்துபோன' சங்கதி! ஆளவந்திருப்போர் இதனை ஏனோ மறந்தவர்கள் போல் நடந்துகொள்கிறார்கள்.

இரயிலடியில் இந்தி எழுத்தைப் பார்க்கிறார்கள்—சிந்தனையுள்ளவன் இரத்தக்கண்ணீர் விடுகிறான், சீற்றங்கொண்டவன் தார்ச்சட்டியையும், பிரஷையும் தேடுகிறான். ஆகவே, இந்திப் பெயர்கள் அங்கங்கே மாயமாக மறைகின்றன. இந்த இழிவைத் துடைக்கும்படி நாம் கோவில்பட்டித் தீர்மானம் மூலம் சர்க்காரை கேட்டுள்ளோம். அவர்கள் இன்னமும் விடையளிக்கவில்லை.

சென்ற வாரம் சில ஊர்களைத் தொகுத்து தந்துள்ளோம். இந்தவாரம் அதனைத்தொடர்ந்து வெளியிடுகிறோம்.

சாதிப்பெயர் கூடாது!	இந்திப்பெயர் அடாது!
மாயவரம்	மங்கநல்லூர்
பசுபதி கோவில்	பேரளம்
திருப்பத்தூர்	தாராபுரம்
இராணிப்பேட்டை	சிவகெங்கை
பேரளம்	கிழக்குசேலம்
	காஞ்சிபுரம்
குடியாத்தம்	நாகை
வேலூர்	வாணியம்பாடி
சேலம்	விற்குடி
வாணியம்பாடி	விசலூர்
	நன்னிலம்
	முடிகொண்டான்
ஆடுதுறை	ஆடுதுறை
லெட்சுமாங்குடி	
செம்பனார்கோவில்	செம்பனார் கோவில்
அரூர்	பாபநாசம்
வல்லம்படுகை	திருவண்ணாமலை
மண்ணச்சநல்லூர்	வல்லம்படுகை
பள்ளியக்கிரகாரம்	அந்தணப்பேட்டை
திருவத்திபுரம்	சுந்தரப் பெருமாள் கோயில்
அரகண்டநல்லூர்	சிக்கில்
சுந்தரப் பெருமாள் கோயில்	பட்டவாய்த்தலை
கொரடாச்சேரி	திருச்சிற்றம்பலம்
திருப்புறம்பியம்	திருக்கோயிலூர்
ஈரோடு	மாயவரம்
அய்யம்பேட்டை	அன்னவல்லி
சோழபுரம்	சுப்ரமணியபுரம்
நன்னிலம்	குள்ளஞ்சாவடி
சென்னை (பல பகுதிகளில்)	குறிஞ்சிப்பாடி
	வடலூர்
	நெய்வேலி
திருச்சி	ஊத்தங்கால் மங்கலம்
விழுப்புரம்	கேப்பர்குவாரி
விற்குடி	ஆலப்பாக்கம்
கங்களாஞ்சேரி	புதுச்சத்திரம்
ஆண்டிப்பந்தல்	பரங்கிப்பேட்டை
சன்னாநல்லூர்	கிள்ளை
	காராமணிக்குப்பம்
	வார்க்கால்பட்டு
	நெல்லிக்குப்பம்
	மேல்பட்டாம்பாக்கம்
	திருச்சி

சாதிப்பெயர்கள் கூடாது என்று முடிவு செய்து, அவைகள் மறையத் தொடங்கியுள்ளன. தமிழகத்தில், இந்தியிலே ஊர்ப்பெயர்கள் இருத்தல் அடாது என்று அழிந்துபோக ஆரம்பித்துள்ளன—ஆம், இது ஆட்சியாளருக்கு ஒரு அபாய அறிவிப்பு—எச்சரிக்கை! இதுவே அறப்போராக மாறும்—மாறவேண்டும்! ஆகவே ஆளவந்தார் இப்பொழுதே முந்திக்கொண்டு, அவைகளை நீக்கிட முனையவேண்டும்!

இருட்டிலே சென்றுவிட்டு, ஒளியிலே ஒன்றும் தெரியாதவர்கள் போல நடந்துகொள்ளச் சொல்லவில்லை. பகிரங்கமாகவே, இந்தப்பயங்கர இழிவுகளைப்போக்க அறவழி நடந்து மறச்செயல் புரிந்திடவேண்டும். நாம் இந்நாட்டு 'இதயங்களை'ப் பக்குவப்படுத்தி வருகிறோம். ஆனாலும் பொதுமக்களின் எழுச்சி, நாம் போடும் அணையையும் கடக்கிறது—பரவியுள்ள உணர்ச்சி, அடங்கும் நிலையையும் தாண்டுகிறது!—தாங்கமுடியாத நிலையை உண்டாக்கிவிட்டது, நாட்டிலே பரவியுள்ள நச்சுக் கொள்கைகளும், நாசகால எண்ணங்களும், விஷ நடவடிக்கைகளும், வேதனை தரும் சூழ்நிலைகளும்! ஆகவே, ஆட்சியாளர் 'அழிப்பவர்களை'த் தேடுவதைவிட, அழியவேண்டிய அழிக்கப்பட வேண்டிய இழிவுகளை அழித்தொழிக்க எழவேண்டும்! செய்வார்களா? திக்கெட்டும் பரவிவருகிறது தீ—அதனைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

———

வடநாட்டு ஆதிபத்தியத்துக்கு எச்சரிக்கை!

டால்மியா தொழிலாளர் அறப்போர்

பிரிவினை கீதத்தின் எதிரொலி

"வீர நன்னாட்டு மக்கள் வேதனையில் உழல்வதா? வறுமையில் வாடுவதா? வாழ்க்கையில் வளங்காண வழி செய்யாத அநியாய நிர்வாகத்தை எதிர்த்து அறப்போர் தொடங்க 11—10—50 புதன் நள்ளிரவு 12 மணியிலிருந்து வேலை நிறுத்தம் செய்கிறோம் காந்திய வழியில். நாங்கள் நடத்துவது கூலிப் போராட்டமல்ல, ஏழை விவசாயிகளும், பொதுமக்களும் இங்கித நிலைக்கு வர வேண்டுமென்ற எண்ணத் துடிப்பு இந்தபோராட்டம். உலகத்தில் நாகரிகம் தோன்றுவதற்கு முன் நாகரிகத்தில் தலை சிறந்து விளங்கிய நந்தமிழ் நாடு இன்று எங்கு நோக்கினும் குட்டிச்சுவர் கொண்ட வீடும் குடிசைகளும் காட்சியளிக்கின்றன. தமிழ் நாட்டின் (தொழிற்சாலைக்கு பக்கத்திலுள்ள) வளமான மண்ணையும், கல்லையும் சேர்த்து அரைத்து அடக்க விலையைவிட சிமண்டை அதிக விலைக்கு ஏழைகள் வாங்க முடியாத நிலைக்கு விற்கிறீயே அது கூடாது. சிமிண்டை அடக்க விலையில் கொடுத்து தமிழ் நாட்டிலுள்ள குடிசைகளும், குட்டிச்சுவர்களும் மாறி ஒவ்வொரு கிராமமும் தலை சிறந்த நகரமாக்கப்பட வேண்டுமென்ற எண்ண எழுச்சி இந்த அறப்போர்.

வேலை நிறுத்தத்தை நீடிக்கவிட்டு நிர்வாகம் வேடிக்கை பார்த்தால், வந்தவனை வாழ்வித்த தமிழ் நாடு சொந்த நாட்டு மக்களை துயரத்திலாழ்த்தாது, வள்ளல் பாரியும், குமணனும் தோன்றிய பரம்பரையினர் வம்சமாகிய நாங்கள் உள்ளவரை தொழிலாளர்களை பட்டினியால் வாடவிடோமென்று பாரதிர பறை சாற்றுங்கள். எங்கள் மண்ணையும், கல்லையும் சுரண்டி காசாக்கிய பணமுதலை டால்மியாவே! தொழிலாளர்களின் நியாயமான குறைகளை நீக்கிவிடு இல்லையேல் இமயத்தில் கொடி பொறித்த எங்கள் வம்சம் உணர்ச்சி வயப்பட்டு ஒன்றுபட்டால் சிமிண்டுத் தொழிற்சாலை எங்களுடையதாகும் என்பதையும் அறிவாயென்று அறைகூவி எங்களுக்கு ஆதரவு கொடுக்கும்படி தாழ்மையுடன் மக்களை கேட்டுக்கொள்கிறோம்!"

* * *

'டால்மியா'புரம் சிமிண்ட் தொழிலாளர் சங்கத்தின் வேதனை கீதம், இது!

களிமண்ணைக் கட்டிடமாக்கும் சிமிண்டாக ஆக்கும் காளைத் தொழிலாளர்களின் அறப்போர் முரசு இது!

அவர்கள் பலர்—அவர்களாலேயே அந்த ஆலை நடக்கிறது—'டால்மியா' பணம் குவித்துக் கொண்டேயிருக்கிறார்!

எனினும், அவர்கள் அழுகுரல் அலட்சியப் படுத்தப்பட்டு வருகிறது—பனியா நிர்வாகத்தால்.

"வருடாந்திரக் கூலி உயர்வு, போனஸ், பஞ்சப்படி ஆகியவைகளை மறக்காமல் கொடு. வேலையிலிருந்து நீக்கிவிட்ட தொழிலாளர்களை நிர்க்கதியாய் வீதியிலே அலைய விடாதே, வேலை கொடு!" என்று 12 மாதங்களாக, வேண்டிக் கேட்டனர். சமாதான முறைகளில், கெஞ்சிக் கோரினர்.

கேளாக் காதினராகவே, இருந்து வருகிறது, டால்மியா நிர்வாகம். தொழிலாளர்களின் உரிமைக் கோரிக்கை நியாயமானது — உண்மையின் குரலொலி.

நாள் ஒன்றுக்கு 250 டன் சிமிண்ட் உற்பத்தி செய்யப்பட்டது, முன்பு!

இப்போதோ 750 டன் சிமிண்ட் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது!!

தமிழ் நாட்டு உழைப்பாளத் தோழர்களின் வியர்வை, காசாகிறது! அதைக்கொண்டுபோய் பூட்டி வைக்கும் வடநாட்டு முதலாளியோ, தொழிலாளர்களின் கோரிக்கைகளைக் கண்டு கேலி பேசுகிறார்! 'ஒழித்துவிடுவேன்!' என்று மிரட்டுகிறார்!!

உழைப்பவர் இந்நாட்டு மக்கள்—சிமிண்ட் தரும் பூமி — இன்பத் திராவிடத்தின் பூமி! இருந்தும் நாட்டுக்குரியோர் வாடுகிறார்கள்—பட்டினியால் கதறுகிறார்கள், கண்ணீர் சிந்துகிறார்கள்!

'வந்தவன்'—வடநாட்டு முதலாளி—வாழ்வு கொழிக்கிறது!

ஐயகோ, வெட்கங்கெட்ட நிலை! இரத்தக் கண்ணீர் சிந்தும் காட்சி!!

* * *

கேட்டுப் பார்த்து, அலுத்துப் போன, சிமிண்ட் தொழிலாளர்கள் 11—10—50 புதன் இரவு முதல் அறப்போர் துவக்கிவிட்டனர். அன்று முதல் வேலை நிறுத்தம் நடைபெற்று வருகிறது

சிமிண்ட் தொழிலாளர்கள் தொகை மொத்தம் 1200. ஆனால் அவர்களை அடக்கியாள வடநாட்டிலிருந்து வந்து கிடப்போரோ 15 பேர்!

மென்மேலும் வடநாட்டினரையே கொண்டு வந்து, ஆலையை நிரப்பத் திட்டமிட்டிருக்கிறது, டால்மியா கும்பல். அதன் விளைவாக, இந்நாட்டு மக்கள், வேலையிலிருந்து நீக்கப்படுகின்றனர்!

இது அநீதியா—இல்லையா? இதயம் துடிக்காதா? உழைப்போர் உலர—எங்கிருந்தோ வந்தவன் கர்ஜிப்பதா? கன்றுவிக் காட்சியல்லவா? இதைச் சகித்துக் கிடக்க, நமது மக்கள், என்ன சண்டெலிகளா, 'சோற்றுத் துருத்தி'களா?

வீரப் பரம்பரையினர், 'வடநாட்டு' பண ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முரசு கொட்டியிருக்கின்றனர்.

முரசொலியின் முழக்கத்தை, தேசிய தினசரிகள், மறைக்கின்றன. எனினும், தொழிலாளர் உரிமைப்போர் அமைதியான முறையில் நடைபெற்று வருகிறது.

உரிமைப்போரை உதாசீனம் செய்வது—விபத்தை விரும்பிப்பெறுவதாகும். ஆகவே, ஆளவந்தார், உடனடியாகத் தலையிட்டு, நம் தோழர்கள் நல்வாழ்வுக்கான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று விரும்புகிறோம் — வேண்டுகிறோம்!

N. B. :— 17—10—50-க்கேநியன்று மேற்படி போராட்டம் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தோழர் காமராஜ் தலையிட்டால் வாபஸ் பெறப்பட்டதாக "தினசரி" இதழின் மூலம் தெரியவருகிறது.

*

சங்கரநயினூர் கோவில் உணவு நெருக்கடி

தி. மு. க. சார்பில் தூதுக்குழு

—*—

நெல்லை மாவட்டம் சங்கரநயினூர் கோவிலில் பெருவாரியான மக்கள் நெசவுத்தொழிலாளர்கள். அவர்களுக்குபோதிய நூல் இல்லாமல் அல்லலும் காணாகிறார்கள். அதே நிலையில் இவ்வாரம் உணவு ரேஷன் படுமோசமான 3, அவுன்சாக குறைந்து விட்டது. இதை முன்னிட்டு இந் நகரில் முகாம் போட்டிருந்த ரெவின்யு டிவிஷனல் ஆபிசர்முன் இவ்வூர் தி. மு. கழக செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம், தோழர் ச. ப. நயினூர் ஆகியோர் தலைமையின் கீழ் ஒரு உணவு தூதுக்குழு சென்றது. தி. மு. கழக சார்பில் ஒருவேண்டுகோள் மனு சமர்ப்பிக்கப் பட்டது. அதில் உடனடியாக உணவு அளவை உயர்த்தவேண்டும் என்றும் இல்லையேல் சாவுக்குழி பல-பல ஏற்படும் என்றும் கேட்டுக்கொள்ளப் பட்டது.

மனுவை பார்த்த பிறகு, "நீங்கள் எல்லோரும் கோவிலுக்கு போவீர்களா?" என்று ஆபிஸர் அங்கு கூடியிருந்த மக்களை பார்த்து கேட்டார். போவோம் என்றார்கள். அப்படியானால் "மழை வரட்டும் என்று கடவுளிடம் முறையிட்டால் என்ன?" "முறையிட்டோம் ஆனால் பலன் இல்லை" "கடவுளிடம் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?" "ஆம் இல்லை! நாங்கள்தான் கடவுள்கள் என்று பொதுமக்கள் கூறினார்கள்" "எங்களால் ஆனதை உடனடியாக செய்து உணவு குறையை நிவர்த்தி செய்கிறோம்" என்று கூறினார் ரெவின்யு டிவிஷனல் ஆபிஸர், என்று மேற்படியூர் தி. மு. க. செயலாளர் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் எழுதுகிறார்.



பொதுச் செயலாளருக்கு வரவேற்பு

எழும்பூரில் 'சென்னை!'

'ஆரியமாயை' வழக்கில் சிறைநீங்கிய தி. மு. க. பொதுச் செயலாளர் அண்ணாத்துரை அவர்கள் சிவகெங்கை, மதுரை, காஞ்சி ஆகிய இடங்களுக்குச் சென்று, 6—10—50 இரவு 7-30 மணிக்கு எழும்பூர் வரும் 'திருச்சி எக்ஸ்பிரஸில்' திரும்புவதைக்கேள்வியுற்ற சென்னை மக்கள், மாலை 4 மணி முதலே ரயிலடிக்குத்திரண்டனர். பிளாட்பாரத்தில், சிறிதும் அசைவதற்கில்லாத பல்லாயிரக்கணக்கான மக்கட் பெருங்கடல், பொதுச்செயலாளரைக்காண அலைமோதியது; நூற்றுக்கணக்கான கழகக்கொடிகள் 'வருக' என வரவேற்பதைப் போன்று பறந்தன. மணம் கமழ மலர்மாலைகள், வைத்திருப்பவர் கைகளினின்றும் அவரின் கழுத்துக்குத்தாவும் நிலையில்தவித்தன. இத்தனைக்கும் குழப்பம் சிறிதுமின்றி, கண்காணிக்க வந்திருந்த போலீஸ், ரிசர்வ்போலிஸ் படையினர், அதிகாரிகள் முதலானவர்க்குத் தொல்லை சிறிதுமின்றி, மக்கள் ஆர்வத்தோடும், அமைதியோடும் அணிவகுப்பாய், அண்ணாவைக் கண்கொட்டாது எதிர்நோக்கியது—இயக்கத்தின் எழுச்சியை எடுத்துக் காட்டுவதாய் விளங்கியது. இரண்டாவது பிளாட்பாரம் முழுதும் நிரம்பிவிட்டதால், வெளியிலும் நிலையத்தின் எதிரிலும், சுற்றுப்புறத்திலுமாக 10000க்கு மேற்பட்ட பெருந்திரள் குழுமியிருந்தது. வண்டியும் வந்தடைந்தது; பொதுச்செயலாளரும் இறங்கினார்; அவ்வளவுதான்! புதையல் கண்டவர்க்குள்ள பொலிவுடன் மக்கள் முகம் மலர்ந்தது. வாழ்த்தொலியுடன், மாலைகள் அணிவிக்கப்பட்டன. போட்டோக்கள் பல எடுக்கப்பட்டன; சென்னையின் இளைஞர்கள் பலவற்றின் சார்பில் மாலைகள் சூட்டப்பட்டன. மகிழ்ச்சியால் மெய்மறந்த மக்களின் ஆர்வம் கரைபுரண்டோடியது. மக்கட் பெருங்கடலில் மிதந்திடும் கலம்போல வருவதுபோன்றிருந்தது, அவரின் அப்போதைய நிலை! கழக முக்கியஸ்தர்களின் முழுமுயற்சியில் கூட்டத்தைக் கடந்துவிட்ட பி. என். ஏ. மக்களின் ஆரவாரமுழக்கத்துடன், தங்காரிலேயே நமது கழகத்தலைமையலுவலகத்திற்கு அழைத்துவரப்பட்டார்.

(க. சி.)

24-10-50 ஆச்சாரியார் சென்னை வருகிறார்!

ஆச்சாரியார்

தமிழர்களைச் சிறையிலே தள்ளியவர்!

★

தடியடிக்கு நம்மை ஆட்படுத்தியவர்!

★

திராவிடத்தை - வடநாட்டுக்கு அடகு வைப்பவர்!

★

தாலமுத்து - நடராசனை பிணமாக்கித் தந்து பெருமைகொண்டவர்!

★

பெரியாரை 'பெல்லாரி' சிறையில் போட்டவர்!

★

இந்தி ஆதிபத்யத்தின் காவலர்!

★

நம் வாழ்வு சிக்கிச் சிதைய ஆதரவு அளிப்பவர் வருகிறார்!

காட்ட வாரீர், கருப்புக் கொடி!

பொன்னான சந்தர்ப்பம்! புரியச் செய்வோம் நம் அதிருப்தியை!!

24-10-50 செவ்வாய்

காலை 8-0 மணிக்கு

கோட்டை ஸ்டேஷனுக்கு அருகாமையில்

மாலை 3-30 மணிக்கு

இராயப்பேட்டை டிராம்வே லைன் ஓட்டல் அஜந்தா அருகில்

எல்லோரும் காட்டுவோம் கருப்புக் கொடி

1-ம் பக்கத் தொடர்ச்சி

பிற்காலம் எழுந்த இலக்கியங்கள் வெறும் கற்பனையாகவே ஆக்கப்பட்டன. வாழ்க்கையைத் தனியே பிரித்தன. அத்தகைய இலக்கியங்கள் படிப்படியாகத் தோன்றின. கம்பராமாயணம், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகங்கள், திவ்வியப்பிரபந்தங்கள் இவை இடைக்காலத்தே தோன்றியவை. மக்களைத் தாழ்ந்த நிலைக்கு இவைகள் கொண்டு சென்றுவிட்டன தற்காலம் தமிழகமெங்கணும் வெற்றி வலம் புரிந்து வரும் கவிஞர் பாரதிதாசனார் ஆவார். அவர் இலக்கியத்தை வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் காட்டுகிறார். எடுத்துக்காட்டாக அவர் 'சிற்றூர்' என்ற தலைப்பில் சேரி, உழவர், வாழை இவற்றை கவிதை நயத்தோடு வருணிக்கிறார். பில்ஹணியத்தில் கவிஞன் காவலன் மகளைக்காதலித்ததற்காகக் குற்றம் சாட்டப்பட்டுத் தூக்கு மேடையில்நிறுத்தப்பட்டபோது அவன் பேசும்வாயிலாக நாட்டில் உள்ள தொழிலாளர், கலைஞர் இவர்களின் உரிமைகளை அழகுபட விளக்குகிறார். இவ்வாறு வாழ்க்கையோடு தொடர்புகொண்ட கவிதைகளை இயற்றல்வேண்டும் எதையும் விட்ட இடத்திலிருந்தே தொடங்கல் வேண்டும். பின்னடையாமல் முன்னேறவேண்டும். "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்ற கருத்துக்களை ஏற்றுக் கொள்கிறோம். குறளில் 15/16 பாகம் ஏற்றுக் கொள்கிறோம். ஈத்துவக்கும் தன்மைவேண்டும். ஆகவே, தோழர்களே! சிந்தியுங்கள். சிந்திக்கத் தெரியாதவன் முட்டாள்; சிந்திக்கத் தெரிந்தும் சிந்திக்காமல் இருப்பவன் கோழை சிந்தித்து அறிந்தும் அதைமாற்றி உரைப்பவன் வஞ்சகன். சிந்தித்து நல்லது என்று கண்டதை வெளியிடுபவன் அயோக்கியன். ஆகவே சிந்தித்து நாட்டுக்கு நற்பணியாற்றுமாறு உங்களைக் கேட்டுக்கொண்டு எனக்குப்பேச இடமளித்த கழகத்தார்க்கு நன்றி கூறி அமர்கின்றேன்.

தலைவர் முடிவுரைக்குப்பின் துணை அமைச்சர் சொ. வீரபத்திரன் அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

எங்கள் நன்றி!

"மாநாடு நடத்துகிறார்களாம், இந்தப் பஞ்ச காலத்தில்! யார் வரப்போகிறார்கள் இவர்கள் மாநாட்டிற்கு? இவர்கள் மாநாடு நடத்துவதைப் பார்க்கத்தான் போகின்றோம்!" என்றெல்லாம் ஏளன மொழிகளை மாநாடு தொடங்கு முன்னர் தொண்டைகள் காயக்காய மக்களிடையே உளறிய தோழர்கள் வெட்கமடையும், வண்ணம் ஏராளமாகக் கூடினர், இராமநாதபுர மாவட்ட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டில், சிவகெங்கையில்! அத்தகைய சிறப்பைத்தந்த திராவிடத் தோழர்கள் அனைவருக்கும், சிறையிலிருந்து வெளி வந்த உடனேயே சிரமத்தையும் பாராது சிவகெங்கை மாநாட்டை நடத்தித் தந்த நம் கழகப் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்கட்கும் மாநாட்டில் தலைமை யேற்ற "திராவிடன்" ஆசிரியர் தோழர் என். வி. நடராசன் அவர்கட்கும், திறப்புவிழா ஆற்றிய தோழர் உடுமலை கனகராசன் அவர்கட்கும், மாநாட்டிற்காக தொடக்கத்திலிருந்து இறுதிவரை தொண்டாற்றிய தொண்டர் மணிகளாம் இரா. செண்பகம், மு. மாரிமுத்து, பெரி. சுவாமிநாதன் (ஆசிரியர் சங்குநாதம்) ச. இசாக்கலிங்கம் (வான்மதி, துணையாசிரியர் சங்குநாதம்) இன்ன பிறருக்கும், மாநாட்டில் இன்னிசை வழங்கிய இசைத் தென்றல் எம். எம். மாரியப்பா, இசைச் செல்வர் யூசுப், இசைமுரசு நாகூர் ஹனிபா முதலியோர்க்கும், "சந்திரமோகன்" நாடகம் நடத்தித் தந்த நடிப்புப் புலவர். கே. ஆர். ராமசாமிக்கும் மற்ற நடிகத் தோழர்கட்கும், மற்றும் மாநாட்டிலே கலந்து கொண்டு சொல்விருந்தளித்த செல்லோருழவர் கட்கும், கொட்டகை அமைத்த ரங்கன், நாகன், அவர்கட்கும், மின்சார வசதிகள் செய்து தந்த திருச்சி ராபி அண்டு கம்பெனியார்க்கும், ஒலி பெருக்கி தி. லெ. குழுவினர்க்கும், ஓவியந் தீட்டி உவகைக் கடலிலாழ்த்திய நடராஜன், சிவானந்தம் ஆகியோர்க்கும், உணவு விஷயங்களில் எல்லோர்க்கும் "திருப்தி" அளித்த காத்தமுத்து, பாலுச்சாமி முதலியோர்க்கும், மாநாட்டின் வெற்றிக்குக் காரணமாயிருந்த பணிகள் பல செய்த சிவசண்கசுந்திரம், உத்தண்டன், எம். எஸ். இராமசாமி, ஆதிநாராயணன், சா. நடராசன் ஆகியோர்க்கும், மாநாட்டின் வெற்றிக்கு உறுதுணையாயிருந்த எல்லோருக்கும் எமது உளமார்ந்த நன்றி!

இராம. சுப்பையா,

செயலாளர் இ. மா. தி. மு. க. மாநாடு சிவகெங்கை.

✻

மதுரை பல் தொழிற் கல்லூரி!

டைரக்டர் A. S. A. சாமி, சொற்பொழிவு

மதுரை: பல் தொழிற் கல்லூரி (Poly technic) சார்பில் 10—9—50 அன்று திரு. சத்தியா தலைமையில் ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. 'இன்றைய பட உலக நிலை' என்னும் பொருள் பற்றி திரு. A. S A. சாமி B. A (Hons) தெளிவாக, அழகாக, விளக்கிப் பேசினார். அதுபோது, இன்றைய பட உலகின் நிலை மிகவும் கேவலமாக இருப்பதாகவும் அது வளர, சர்க்காரின் உதவி அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டதோடு சினிமாக் கலையில் மறுமலர்ச்சி மணம் வீச வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும், பல ஆதாரங்களோடு, எடுத்துச் சொன்னார்.

இக் கல்லூரியின் சரித்திரத்தில் இக் கூட்டம் முக்கியம் வாய்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

Edited Printed & Published by C. N. Annadurai M A. at Dravida Nadu" Press 95, Tirukkachinambi Street Kancheepuram